

# “எங்கே ஒதுக்கினார்களோ, அங்கே என்னை வெல்லவைத்த இயக்கம் இது!”

**கழக இளைஞர் அணி நடத்திய ‘தி.மு.க 75 அறிவுத் திருவிழா’ நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற ‘இருவண்ணக் கொடிக்கு வயது 75’ கருத்தரங்கத்தின் ஆறாவது அமர்வில் ‘அடையாளமும் உரிமையும் தந்த இயக்கம்’ என்ற தலைப்பில், கழக மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் அ.ரியா அவர்கள் ஆற்றிய உரை:**



அ.ரியா, கழக மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர்

“அடையாளம் என்றால் என்ன? என் சுயசரிதையை இரண்டு நிமிடங்களில் சொல்கிறேன். 2004-இல் நான் என் தாயிடம் சென்று, “அம்மா நீங்கள் குழந்தைகளைப் பெற்றெடுத்து வளர்க்கும் போது என்னை மகனாகப் பெற்றெடுத்து வளர்த்தீர்கள். ஆனால், என்னுடைய உணர்வு பெண்ணாக இருக்கிறது. நான் பெண்தானே’ என்று என்னுடைய உணர்வை என் தாயிடம் சொன்னபோது, என்னுடைய தாயின் மனநிலை எவ்வாறு இருந்திருக்கும் என்று நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அப்போது என்னைச் சுற்றி இருந்த சமூகம், என்னுடன் பள்ளியில் படித்த நண்பர்களின் பார்வை எப்படி இருந்திருக்கும் என்று நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அன்றைய காலகட்டத்தில் ஒரு திருநங்கை கல்வி பயில முடியுமா, ஒரு திருநம்பி வெளியில் நடமாட முடியுமா? இதெல்லாம் கலைஞர் ஆட்சி அமைந்த 2006-க்கு முன்பு நடந்தவை.



## முத்தமிழறிஞர் கலைஞர்

எண்ணற்ற இழிவுச் சொற்களால் எங்களை இழிவுபடுத்திய காலத்தில் திருநங்கை என்ற அங்கீகாரத்தையும் அடையாளத்தையும் கொடுத்தவர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். ஒரு காலத்தில் நான் யார் என்று சொல்லவே முடியாத காலத்தில், நான் வெளியில் வந்து நான் இந்த பாலினம்தான் என்று சொல்லும் போது, இந்த சமூகம் என்னை புறக்கணித்தது. ஆனால், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் இந்தப் பெயரை தந்ததற்குப் பிறகுதான், உடன்பிறப்புகளாகிய உங்களால் நாங்கள் அரவணைக்கப்பட்டோம்.

## எங்களுக்கு நலவாரியம்

2008-ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் இந்தியாவிலேயே முதல்முறையாக எங்களுக்கு நலவாரியம் அமைத்தார். இப்போது நாங்கள், வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை எனப் பல அடையாளங்களோடு வாழ்கிறோம். நாடாளுமன்றத்திலே நம்முடைய திருச்சி சிவா அவர்கள் திருநங்கைகளுக்கான தனிநபர் மசோதாவைக் கொண்டு வந்தார்.

கல்வியிலும் வேலை வாய்ப்புகளிலும் ஆண்கள், பெண்களைப் போல் திருநங்கைகளுக்கும் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று நாடாளுமன்றத்திலே குரல் எழுப்பியது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த அண்ணன் திருச்சி சிவா அவர்கள்தான். அன்றைக்கு இதற்கு உறுதுணையாக இருந்த அக்கா கனிமொழி அவர்களுக்கும் தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

2021-இல் தலைவர் தளபதி அவர்கள் ஆட்சியில் அமர்ந்த உடனே கொண்டுவந்த ஐந்து திட்டங்களில் முக்கியமான திட்டம் மகளிர் விடியல் பயணத் திட்டம். அந்தத் திட்டத்தில் திருநங்கைகளும் பயணிக்கலாம் என்று தலைவர் அவர்கள் அறிவித்தார். ஒரு சமூகம் விளிம்பு நிலையில் இருக்கிறது அவர்கள் மேலே வர வேண்டும் என்றால், கல்வியின் மூலமாகத்தான் வர முடியும். ‘திருநர் சமூகத்தின் கல்விக்கட்டணம், விடுதிக் கட்டணம் ஆகியவற்றை தமிழ்நாடு அரசே ஏற்கும்’ என்று அறிவித்தவர் நம் திராவிட மாடல் நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள். அதுமட்டுமல்ல, திருநர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ் பயன்பெறலாம் என்றும் அறிவித்தார்.

## உரிமைப் பாதுகாப்பு மசோதா

2018-இல் திருச்சி சிவா அண்ணன்தான் ‘திருநங்கைகள் உரிமைப் பாதுகாப்பு மசோதா’வைக் கொண்டுவர, மாநிலங்களவையில் முன்முயற்சி எடுத்தார். பல தடைகளுக்குப் பின்பு ஒன்றிய அரசு, அந்த மசோதாவை நிறைவேற்றியது. ஆனால், அது திருநங்கைகளின் உரிமைகளை உறுதிப்படுத்தும் முழுமையான மசோதாவாக இல்லை. அதிலும் சில திருத்தங்களை நாங்கள் போராடிப் பெற்றோம். அதற்குப் பிறகு, 2025-இல் நம்முடைய திராவிட மாடல் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் திருநங்கையர் கொள்கை வரைவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

இந்தக் ‘காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு’ புத்தகத்தில்கூட என்னுடைய தோழர் லிவிங் ஸ்மைல் வித்யா, ‘வட மாநிலங்களில் மாட்டிறைச்சியைக் கடத்தினால், பத்து ஆண்டுகள் சிறை. ஆனால், திருநர் மக்கள் மீதான பாலியல் குற்றங்களுக்கு எதிரான தண்டனையை ஒன்றிய அரசு 7 ஆண்டுகளில் இருந்து இரண்டு ஆண்டுகளாக குறைத்து இருக்கிறது’ என்று குறிப்பிட்டு எழுதியிருக்கிறார். இதுதான் ஒன்றிய அரசினுடைய இயலாமை. ஆனால், மாநில அரசு இங்கே இருக்கக்கூடிய திருநர் மக்களை எப்படிப் பாதுகாக்க வேண்டும், அவர்களுக்கு கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் எப்படி முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று சிந்தித்து வரைவுக்கொள்கையை உருவாக்கியிருக்கிறது.

அதுமட்டுமா, 2004-இல் நான் வீட்டைவிட்டு வெளியே வரும்போது அடைக்கலம் கிடைக்காமல் இடம் தேடி அலைந்தேன். எல்லா திருநங்கைகளுக்கும் இப்படியான அனுபவங்கள்தான். ஆனால், தமிழ்நாடு அரசு இப்போது வீட்டை விட்டு வெளியேறும் திருநங்கைகளுக்காகவே சென்னையிலும் மதுரையிலும் ‘அரண்’ என்ற இல்லத்தை உருவாக்கியிருக்கிறது. ‘நீ உன்னுடைய உணர்வை வெளிப்படுத்தியதால், உன்னை வீட்டை விட்டு வெளியே துரத்துகிறார்கள் என்றால், கவலைப்படாதே இந்த அரசு இருக்கிறது. நாங்கள் இருக்கிறோம், உங்களுக்கான இல்லம் உருவாக்கியிருக்கிறோம்’ என்று சொல்லி அவர்களுக்கு அடைக்கலம் தந்த அரசு, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு.

## எங்களுக்கு வாக்குரிமை

இந்தியாவிலேயே எங்களுக்கு வாக்குரிமையை முதன்முதலில் கொடுத்ததும், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசுதான்.

வரலாற்றிலேயே முதல்முறை தேர்தலில் போட்டியிடும் அங்கீகாரத்தை அளித்து, களமாட செய்ததும் நம் திராவிட முன்னேற்றக் கழகம்தான். அதனால்தான் நான் ஒன்றியக்குழு உறுப்பினராகப் போட்டியிட்டு வெற்றிபெற்றேன், அதுவும் உதயசூரியன் சின்னத்தில். நீங்கள் எந்த ஊரில் என்னை ஏளனப்படுத்தினீர்களோ, எந்த ஊரில் கொச்சைப்படுத்தினீர்களோ, நீ பிறந்ததே சாபம் என்று சொன்னீர்களோ, அந்த மண்ணில் என்னை மக்கள் பிரதிநிதியாக்கியது திராவிட முன்னேற்றக் கழகம். யாரெல்லாம் என்னை ஒதுக்கினார்களோ, அவர்களே எழுந்து நின்று எனக்கு வணக்கம் வைக்கச் செய்தது, திராவிட முன்னேற்றக் கழகம்.

தலைவர் கலைஞர் போலவே, அன்புத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அண்ணன் போலவே ‘திருநங்கைகளுக்கு ஒன்று என்றால், ஓர் அண்ணனாக நான் இருக்கிறேன், உங்களை யார் புறந்தள்ளினாலும் சரி, எந்த நேரத்திலும் உங்களுக்கு உடன் பிறந்த சகோதரனாக துணை நிற்பேன்’ என்று எப்பொழுதும் உரக்கச் சொல்வார் நம் எதிர்கால விடிவெள்ளி அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்கள். அதன்படிதான் சேலத்தில் நடைபெற்ற இளைஞர் அணி மாநாட்டில் பாலின சமத்துவம் என்ற தலைப்பில், எனக்கு உரையாட வாய்ப்பு அளித்தார்.

## அடையாள அட்டை

சட்டமன்றத்தில் அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முதல் பேச்சே, திருநங்கைகள் குறித்தும் மாற்றுத்திறனாளிகள் குறித்தும்தான் இருந்தது. அதுமட்டுமல்ல, திருநங்கைகளுக்காக அடையாள அட்டை முகாம்கள் நடத்தியது, அவர்களுக்கு ஏதேனும் பிரச்சினைகள் என்றால் முன்னின்று தீர்ப்பது, தொடர்ந்து தலைவர் கலைஞரைப் போலவே வழிநடத்துவது, இந்த சமூகத்தில் நீங்களும் ஓர் அங்கம், இந்த மேடையிலே நீங்களும் சமமாக அமர்ந்து உங்களுடைய கருத்துகளை இளைஞர்களிடம் தெளிவுபடுத்த வேண்டும் என்று, இந்த அரிய வாய்ப்பை வழங்கியது என்று எங்களின் நலனில் அக்கறை செலுத்துபவராக இருக்கிறார். இப்படி தொடர்ந்து திருநர் சமூகத்தின் உரிமைகளை வலியுறுத்தும் ஒரே இயக்கம் திராவிட முன்னேற்றக்கழகம்தான்.”

---

## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

**வண்ணப்பலகை ஷரீஃப்.அஸ்கர் அலி என்பவரின் முகநூல் பதிவு:**

அறிவுத் திருவிழா – என்ற அற்புதமான செயல் திட்டத்தைக் கையிலெடுத்து, அதை நவம்பர் 8-ஆம் தேதி முதல் நடைமுறையில் கொண்டு வந்துவிட்டார் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின். அதன்படி, முற்போக்கு புத்தக காட்சியும், கலைநிகழ்ச்சிகளும், சிறப்புரைகளும் ஒரு வார காலத்துக்கு நடைபெற்று வருகின்றன. இனி, ஆண்டுதோறும் இவ்விழா நடைபெற உள்ளது. அதன்படி, இந்த ஆண்டில் தி.மு.க.-வின் 75- ஆம் ஆண்டு பவள விழா கொண்டாட்டங்கள் அரங்கேறி நடந்து வருகின்றன.

அதில் 50-க்கும் மேற்பட்ட புத்தக அங்காடிகள் அமைக்கப்பட்டு, அதில் மார்க்சியம், தலித்தியம் மற்றும் திராவிடம் சார்ந்த அரசியல் புத்தகங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. ஆயிரத்துக்கும் மேற்பட்ட தலைப்புகளில் புத்தகங்கள் வைக்கப் பட்டுள்ளன. இன்றைய மதவாத பாசிச அரசியல் சூழலில், நூற்றாண்டு பாரம்பரியமிக்க திராவிட இயக்கமும், கட்சியும், ஆட்சியும் இப்படியான அறிவுத் திருவிழாக்களை ஆண்டுதோறும் நடத்த வேண்டும். மேலும், இதே மைய மண்டபத்தில் ஆண்டுக்கு நான்கைந்து பண்பாட்டு நிகழ்ச்சி களையும், பயிலரங்குகளையும், கருத்தரங்குகளையும் நடத்திட வேண்டும்.

மொழி சார்ந்த கட்டமைப்பில், சமூக அரசியல் சார்ந்த விவாதங்களை முன்னெடுக்கும்போதுதான் நம் அறிவு விரிவடையும். அது நம் கற்பனைத் திறன்களை ஊக்குவித்து, அது நம்முடைய மாநிலத்தின் மனித வளத்தை செம்மைப்படுத்தும்.

அறிவுத் திருவிழாக்கள் தொடரட்டும்.